**மஹரகம நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 21 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொறுத்தமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான செலவுகளுக்காக கடன்கொடுத்தோர் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படாமையால் செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 429,159 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ருக்மலே ஷெல்டன் பார்க் பாதையின் மீதிப்பகுதியினை கொங்கிரீட் பண்ணுவதற்காக ரூபா 215,783 தொகை கடன்கொடுத்தோர்கள் என ஒதுக்கியிருந்த போதிலும் 2015 ஜூலை 17 திகதி வரை அனைத்து கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டிருந்தமையால் செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மஹரகம வர்த்தக தொடர் கட்டிடத்தின் கூரையின் திருத்த வேலைக்காக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 485,000 தொகை கடன்கொடுத்தோர் என ஒதுக்கியிருந்த போதிலும் அந்த ஒப்பந்த வேலை மேற்கொள்ளப்படாமையால் செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் போது சபையினால் ரூபா 5,300,000 தொகை பெறுமதியான பாதை தகர்க்கும் இயந்திரம் ரூபா 530,000 தொகை என நிதிக்கூற்றுக்களுக்கு உட்படுத்தியிருந்தமையால் நிலையான சொத்துக்களின் மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் மீதி ரூபா 4,770,000 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தாக கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டிய போதிலும் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் மீதி ரூபா 4,770,000 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்த்து.

(உ) 2007 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை நகர சபை கட்டளைச் சட்டத்தின் 181(1) பிரிவின் பிரகாரம் கணக்கிடப்பட்ட ரூபா 9,143,457 தொகையான கணக்காய்வுக் கட்டணம் 2016 ஏப்ரல் 30 திகதி வரை செலுத்தியிருக்காததுடன் 2015 ஆண்டிற்கான செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைத்திருந்த குப்பைகள் எடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் டிரக் வண்டியின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 13,026,902 தொகையான செலவு கடன்கொடுத்தோர் மீதிக்கு பிழையான முறையில் ரூபா 801,229 தொகைக்கான களஞ்சிய கடன்கொடுத்தோரும் உட்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலவுக் கடன்கொடுத்தோர் அதே தொகையால் குறைவாகவும் களஞ்சிய கடன்கொடுத்தோர் அதே தொகையால் மிகையாகவும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2015 ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 1,703,809 இற்கான சாக்கடை பவுசர் சேவை வருமான வைப்புக் கணக்கிற்கு உற்படுத்தியிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 1,703,809 தொகையினால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) 2015 ஆண்டிற்கான பெற வேண்டிய ரூபா 35,824,699 இற்கான சம்பள மிளளிப்பு வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஒ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வங்கி மேலதிகப்பற்று ஒன்றென ரூபா 47,867,854 தொகையொன்று கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் உண்மையான அவ்வாறான வங்கி மேலதிப் பற்றொன்று காணப்படவில்லை எனவும் அக் கணக்கு 2015 ஆகஸ்ட் 25 ஆந் திகதி மூடப்பட்டிருந்ததெனவும் வங்கி மீதி உறுதிப்படுத்தல் மூலம் உறுதியாகியது. அதன் காரணமாக கணக்குகளில் நடைமுறை பொறுப்புக்கள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) 2013 ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 90,585,570 இற்கான நிலுவை முத்திரை வரி வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டிற்கான வருமானம் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 118,044,934 தொகையான 6 கணக்கு விடயங்கள் தொடர்புடைய மீதிகள், அதனோடு தொடர்புடைய பட்டியல்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கஞ் செய்யும் போது, நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டுதல்கள் ரூபா 196,513 தொகையும், மிகையாகக் காட்டுதல்கள் ரூபா 3,304,409 தொகையும் அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பலவின வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் பெற வேண்டிய கணக்கு விடயங்கள் தொடர்புடைய கூட்டுப் பெறுமதி ரூபா 119,686,578 தொகைக்காக எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் ஏனைய கணக்காய்வு செயற்பாடுகளின் மூலம் இந்த மீதிகளின் பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

பல வருட காலமாக காணப்படும் ரூபா 25,781 தொகைக்கான தொங்கல் கணக்குடன் தொடர்புடைய மீதி தொடர்பாக கவனம் செலுத்தி அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 88,994,545 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 48,086,862 தொகையாகும்.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மூலதன வருமானம் மற்றும் செலவுகளை சீராக்கல் செய்த பின்னர் தேறிய பற்றாக்குறை ரூபா 51,285,198 தொகையாகக் காணப்பட்டதுடன் திரண்ட நிதியம் அதே தொகையினால் அரிப்படைந்திருந்தது.

### 2.2 வங்கிக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 188(2) ஏற்பாடுகளின் பிரகாரம் 2016 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு பெறுமதி ரூபா 13,907 தொகைக்கான வைப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் தேறப்படாத 02 காசோலைகள் மற்றும் 06 காசுக் கட்டளைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணங்கள் 395(இ) ஏற்பாடுகளின் பிரகாரம் வங்கிக் கணக்குகளில் ஒவ்வொரு மாத இறுதியிலும் கொடுக்கல் வாங்கல்களின் நிலைமை தொடர்பாக தொடர்ந்து வரும் மாதத்தில் 15 மாதத்திற்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும் ஒரு நடைமுறை கணக்கு தொடர்பாக 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்கான வங்கி இணக்கக் கூற்று தயாரித்திருக்கவில்லை.

(இ) நிதிப் பிரமாணங்கள் 396 ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கப்பட்ட 06 மாதங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 177,323 தொகை பெறுமதியான 05 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த உள்ளவாறான வருமானங்கள் மற்றும் நிலுவை வருமானங்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2015<br>உள்ளவாறான அறவிடப்பட வேண்டியவை | உள்ளவாறான அறவிடப் பட்டவை | ஆண்டிற்கான நிலுவை | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை | 2014<br>உள்ளவாறான அறவிட வேண்டியவை | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரியும் வரியும் | 90,718 | 53,138 | 37,580 | 74,306 | 84,256 | 76,246 |
| வாடகை | 18,520 | 14,553 | 3,967 | 17,376 | 20,671 | 27,046 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,002 | 1,002 | - | 18 | 833 | 29 |
| ஏனைய வருமானங்கள் | 258,007 | 126,812 | 131,195 | 162,209 | 182,845 | 124,914 |
| | 368,247 | 195,505 | 172,742 | 253,909 | 288,605 | 228,235 |

### 2.3.2 வீதவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது வீதவரி வருமானம் என ரூபா 90,717,876 இற்கான தொகையொன்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் அவற்றில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 37,579,947 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த வீதவரி நிலுவை ரூபா 72,501,617 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 50,000 வும் ரூபா 100,000 தொகைக்கு இடைப்பட்ட நிலுவை வீதவரி மீதி ரூபா 2,796,570 எனப்படும் மொத்த நிலுவையில் 4 சதவீதமாகும்.

(இ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதியில் ரூபா 100,000 விட மிகையான நிலுவை வீதவரி 18 அலகுகள் காணப்பட்டதுடன் நிலுவையின் கூட்டுப்பெறுமதி ரூபா 4,015,888 தொகையாகும்.

(ஈ) முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 76,245,719 இற்கான திரண்ட நிலுவை வீதவரி மீதியில் 2015 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 44,900,208 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

### 2.3.3 வாடகை

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடை வாடகை பட்டியல்களின் பிரகாரம் ரூபா 16,537,552 தொகையும் இறைச்சி விற்பனை நிலைய வருமானப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 838,270 தொகையும் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் அந்த பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 25,319,300 இற்கான நிலுவை கடை வாடகை வருமானத்தில் இருந்து 2015 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 19,021,523 தொகை அறவிட வேண்டியிருந்தது.

### 2.3.4 காணி ஏல விற்பனை வரி

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 165 ‘இ’ உப பிரிவின் பிரகாரம் நகர சபை ஒன்றில் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் ஏதேனும் ஒரு காணி ஏலவிற்பனயாளர் ஒருவரினால் அல்லது தரகர் ஒருவரினால் பகிரங்க ஏலவிற்பனையில் அல்லது வேறேதும் முறையொன்றின் மூலம் விற்கப்பட்டால் அந்த விற்பைன பெறுமதியில் 1% சதவீதத்திற்கு சமமான வரி ஒன்றினை விற்பனையாளரினால் சபைக்கு செலுத்த வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட 13 காணி விற்பனை சபையினால் அறவிடப்பட்டிருந்தது வருமானப் பரிசோதகர்களின் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த விற்பனை பெறுமதியில் நூற்றிற்கு 1 சதவீதம் ஆகிய ரூபா 4,027,883 தொகை மாத்திரமே. இந்த மதிப்பீட்டு வருமானம் மற்றும் காணித் துண்டுகளின் உண்மையான விற்பனைப் பெறுமதி இடையே வித்தியாசம் கண்டுபிடித்து அந்த வித்தியாசத்தை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. விற்பனைப் பெறுமதியில் 1 சதவீதத்தில் சமமான வரியொன்றினை விற்பனையாளர் சபைக்கு செலுத்த வேண்டும். எனினும் அதற்கு முரணாக கொள்வனவு செய்பவரிடம் ரூபா 37,500 வரித்தொகை ஒன்று சபை அறவிட்டுள்ளதாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.3.5 அறிவித்தல் பலகைக் கட்டணம்

2014 நவம்பர் 28 ஆம் திகதிய இலக்கம் 1891 கொண்ட மஹரகம மாநகர சபை தலைவரின் இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் காட்டியுள்ள அறிவத்தலின் பிரகாரம் மஹரகம நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்படும் அறிவித்தல் பலகைகளுக்காக அதில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் அறவிடப்பட வேண்டுமெனினும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டுள்ளவாறு 16 நிரந்தர அறிவித்தல் பலகைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 370,500 தொகை அறிவித்தல் பலகை கட்டணத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

ஒரு கருமத்திற்காக பெற்றிருந்த முற்பணம் தீர்க்கப்பட்ட பின்னர் மாத்திரம் வேறு ஒரு முற்பணம் வழங்கப்பட வேண்டிய போதிலும் முன்னர் வழங்கியிருந்த முற்பணங்களை தீர்கப்படாதிருந்த போது அதே உத்தியோகத்தருக்கு மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

### 3.2 பதவியணிக் கடன்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் மீதி ரூபா 26,443,244 ஆகக் காணப்பட்டதுடன், அம் மீதியில் பதவியை விட்டு இராஜினாமா செய்துள்ள, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் இறந்துள்ள ஊழியர்களிடம் நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 349,590 தொகையான மீதியும் உட்படுத்தப்பட்டிருந்தது.

(ii) 05 ஊழியர்களின் ரூபா 147,115 தொகையான பலவினக் கடன் மீதிகளில் இருந்து எதுவித கடன் தவணைப் பணமும் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குப்பைகளை அகற்றுவதற்காக தனியார் டிபர் வண்டிகளை வாடகைக்கு எடுக்கும் போது கூறுவிலைகள் கோரப்படாமல் முன்னைய ஆண்டின் போது பெற்றிருந்த கூறுவிலைகளின் தொகைகளுக்கே வாடகைக்கு

பெற்றிருந்ததுடன் அற்காக உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. அந்த டிபர் வண்டிகளுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,550,000 இற்கான தொகையொன்று வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது டிபர் வண்டி கொடுப்பனவு செய்யும் போது குறிப்பிட் சேவை மேற்கொள்ளப்படாத 11 நாட்களுக்காகவும் ரூபா 85,250 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) மீளாய்வாண்டின் போது 02 விபத்துக்களுக்கு உள்ளாகியிருந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக சபையினால் ரூபா 128,153 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த விபத்திற்காக பொறுப்பானவர்களைத் தீர்மானிப்பதற்காகவும் நட்டத்தை குறிப்பிட்ட பொறுப்பு சொல்ல வேண்டியவர்களிடம் அறவீடு செய்வதற்காகவும் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 103, 104 மற்றும் 105 இன் பிரகாரம் சபை செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 ஆண்டு முதல் 2010 வரையான காலப்பகுதியில் 355 அங்கத்தவர்களினால் திருப்பி ஒப்படைக்காத ரூபா 112,148 தொகை பெறுமதியான 558 நூலகப் புத்தகங்கள் தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான இரண்டு டேலர் வண்டிகள் சபையில் பௌதீக ரீதியில் காணக்கூடியதாக இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அந்த இரண்டு டேலர் இயந்திரங்களும் நிலையச் சொத்துப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

#### 3.5.1 தாமதமாகிய செயற்திட்டங்கள்

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட 366 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 314 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 41 செயற்திட்டங்கள் முடிவுறாத நிலையில் காணப்பட்டதுடன் சபை நிதியத்தின் கீழுள்ள 11 செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) சபையினால் 04 செயற்திட்டங்களுக்காக 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2016 மே 06 திகதி வரையும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 மஹரகம வராந்த சந்தை சுத்தப்படுத்தல் சேவை

மஹரகம வாராந்த சந்தையை சுத்தப்படுத்தல் வேலையை நிறைவேற்றும் ஒப்பந்த வேலை 2015 மே 09 திகதி முதல் தனியார் கம்பனி ஒன்றிற்கு சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கேள்வி அழைப்பின் போது இதற்காக கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்த 04 நிறுவனங்களில் இடையே கவனம் செலுத்திய குறைந்த விலை சமர்ப்பித்திருந்த கேள்வியை தள்ளுபடி செய்து கூடியவிலை சமர்ப்பித்திருந்த கேள்வியை தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(ii) குறைந்த விலை கேள்விதாரரை தள்ளுபடி செய்யப்பட்டிருந்த காரணம் சந்தை நடக்கும் நாட்களில் மாத்திரம் சுத்தம் செய்தல் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்ததால் என கூறிய போதிலும் கேள்வி அழைப்பு அறிவித்தலில் தேவை என்ன என தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்தக்காரருக்கு இதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு மாதத்திற்கு பிரயாண முறைகள் 13 இனை மிகைத்து அதிகரிக்கும் பிரயாண முறைகளுக்காக மேலதிகமாக ரூபா 6,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. குறைந்த நிலை சமர்ப்பித்திருந்த தள்ளுபடி செய்யப்பட்ட கேள்விதாரர் தனது கூறுவிலைகள் சமர்ப்பிக்கும் போது குப்பைகளை அகற்றுவதற்காக கம்பெக்டர் வண்டிகள் மற்றும் டிபர் பயன்படுத்துவதாக பிரிவு கேள்வி சபை கவனம் செலுத்தியிருந்ததால் இந்த மேலதிக கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்காக இயலுமாக இருந்திருக்கும் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் குப்பைகளை அகற்றுவதற்காக டிரக்டர் வண்டிகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iv) குறிப்பிட்ட விடயத்தை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த 2015 ஜுலை 15 திகதி ஆக இருந்தாலும் அதற்கு முன்னர் 2015 மே 09 திகதி முதல் ஒப்பந்தக்காரர் குப்பைகளை அகற்றும் விடயத்தை மேற்கொண்டிருந்ததுடன் அக் காலப் பகுதிக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வாராந்த சந்தை வியாபார நடவடிக்கைக்காக வழங்கியிருந்தது 2015 ஜுன் 27 திகதி முதல் என கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(v) மஹரகம வாராந்த சந்தை வளவினை சுத்தம் செய்யும் விடயத்திற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் படி 2015 மே மாதம் முதல் 2015 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்காக சுத்தம் செய்யும் கட்டணமாக ரூபா 2,660,019 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக் காலப் பகுதியிற்கு சந்தை வாடகை வருமானம் என கிடைத்திருந்த தொகை ரூபா 1,833,287 மாத்திரமே.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போது வருமானம் மற்றும் செலவுத் தலைப்புகளிடையே நிதியேற்பாடுகள் மாற்றம் செய்த பின்னரும் பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 3 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 7 சதவீதம் முதல் 82 சதவீதம் வரை முரண்கள் காணப்பட்ட 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு வினைதிறனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 2015 ஆண்டின் போது மூலதன பெறுவனவுகள் என ரூபா 416,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளவாறாக கிடைத்திருந்தது ரூபா 1,348,539 தொகை எனப்படும் 0.3 சதவீதம் மாத்திரமே.

(இ) 114 செலவு விடயங்களுக்காக பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா 146,352,500 இற்கான தொகையில் மீளாய்வாண்டின் போது செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 07 வருமானத் தலைப்புகளின் கீழ் 18 வருமான விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 537,926,500 இற்கான வருமானங்களில் இருந்து மீளாய்வாண்டின் போது வருமானங்கள் ஏதும் சேகரித்திருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி. 133(1) மற்றும் (2) இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் விடயங்கள் ஒழுங்கு செய்திருக்கவில்லை.

**4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பண்டக் கணிப்பீடு**

கராஜ், சுகாதார பிரிவு, பாதைப் பிரிவு மற்றும் பொதுச் சந்தை பகுதிகளில் பொருட் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என 2015 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) வருமான நிருவாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு